Starting time 12.57 P.M.

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 221/2015**

Deposition of **<u>P.W. -4</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Bench clerk of this court, on 06.08.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சண்முகம் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>வாதி தரப்பில் முதல் விசாரணை :</u> நான் இந்த வழக்கில் இடை மனு எண். 1192/2015 ல் நீதிமன்றத்தின் மூலமாக நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டேன். நான் இரு தரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்துவிட்டு வழக்கிடத்தை இரு தரப்பினர்கள் மற்றும் அவர்களது வழக்கறிஞர்கள் மூலமாகத்தான் பார்வையிட்டேன். வழக்கிடத்தை பார்வையிட்டபோது வழக்கு சொத்து சம்மந்தமான வருவாய் துறை ஆவணங்களை கிராம நிர்வாக அதிகாரி என்னிடம் வழங்கினார். அந்த ஆவணங்களை வைத்து அளவியர் உதவியுடன் தாவா சொத்தை நான் அளவீடு செய்தேன்.

2. கூடமலை கிராம புல எண். 636/18 மற்றும் 636/19 ஆகியவைதான் நான் பார்வையிட்ட தாவா சொத்துக்கள். புல எண். 636/19 வாதியின் மெத்தை வீடு. புல எண். 636/18 ஆனது வாதியின் வீட்டிற்கு செல்லக்கூடிய வண்டிப்பாதை. அந்த வண்டிப்பாதையின் மேற்குபுறத்தில் தான் 1-ஆம் பிரதிவாதியின் வீடு அமைந்துள்ளது. தம்மம்பட்டி டு கெங்கவல்லி செல்லக்கூடிய தார்காலைக்கு வடபுறத்தை ஒட்டி 1-ஆம் பிரதிவாதியின் வீடு அமைந்துள்ளது. அந்தப்பகுதியை 1-ஆம் பிரதிவாதி வீடாகவும், கடையாகவும் பயன்படுத்தி வருகிறார்.

3. 1-ஆம் பிரதிவாதியின் வீட்டிற்கு பின்புறத்தில் அவருக்கு சொந்தமான காலி இடம் உள்ளது. அதை அடுத்து வடக்கில் 2-ஆம் பிரதிவாதியின் மெத்தை வீடு இருக்கிறது. 1-ஆம்

பிரதிவாதியின் விட்டிற்கு மேற்கு புறத்தில் 1 மீட்டர் அகலத்தில் 2-ஆம் பிரதிவாதி மெத்தை வீடு வரை சந்து செல்கிறது. அந்த சந்தை ஒட்டிதான் கிழபுறத்தில் பிரதிவாதிகளின் வீடு அமைந்துள்ளது.

4. மேற்படி அமைப்புகளை வருவாய் துறையினர் வழங்கிய ஆவணங்களின் அடிப்படையில் நில அளவையரின் உதவியுடன் பார்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். அளவையரின் வரைபத்தையும் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய அறிக்கையின் 3-ஆம் பக்கத்தில் 9-வது பத்தியில் வாதியின் வீட்டை சென்றடைவதற்கு அந்த வண்டிப்பாதைதையை தவிர வேறு வழியில்லை என்று கூறியுள்ளேன். ஏனென்றால் வாதியின் வீட்டை சுற்றி குடியிருப்பு வீடுகள் தான் உள்ளது.

5. வாதி தன்னுடைய வீட்டை அனுபவிப்பதற்கு தாவா 2-வது இன சொத்தான வண்டிப்பாதை மிகவும் இன்றியமையாத சொத்து ஆகும். அந்த வண்டிப்பாதையில் வடபுறத்தில் 2-ஆம் பிரதிவாதி அந்த தடத்தில் அகலம் 2-1/2 அடி, நீளம் 11-1/2 அடி அளவில் கல் கட்டை பாதையில் கட்டியுள்ளார். அதைப்பற்றி நானும் எனது வரைபடத்திலும்,அளவையரும் அவரது வரைபடத்திலும் ஆக்கிரமிப்பு என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending time : 01.09 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.